முருகப்பெருமான் துணை

**மகான் மௌனச்சித்தர் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.08.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. ஞான குருவே அரங்கா வாழ்க
ஞானிகளை வணங்கும் முறையோடு
தான தரும நெறிபட வாழ
தக்க வழி காட்டும் ஞான தேசிகா
2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
ஆசிதனை சோபகிருது யாளி திங்கள்
அய்யமற சூலதிகதி கதிர்வாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 03 ம் நாள், 20.08.2023, ஞாயிற்றுக்கிழமை)
3. வாரமதில் மௌனச்சித்தர் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரமின்றி ஞானவான்கள் தனை
செகமெல்லாம் உருவாக்க வேண்டி
4. வேண்டியே ஞானிகள் பூசையோடு
வேலவன் பூசை முறை தனை
தொண்டுடன் கலந்து அருளும்
தேசிகனே உன் வழி மக்கள் வர
5. வருகவே தொடரும் பூசையால்
வாட்டுகின்ற கரும வினையை
வருமுலகில் வென்று சிறந்து
வள்ளல் தன்மைதனை அடைவர்
6. அடையவே அவரவர் வாழ்விலும்
அரங்கமகான் தவசக்தியும்
தடையற ஞானமாக மாறி
தனிப்பெருங் கருணை வடிவாக

7. வடிவாக உலக சேமத்தில்
வல்லமைபட தொண்டாற்றி
இடரில்லா ஞானபூமி படைக்கும்
இயம்பிடுவேன் ஞானிகளாவர்
8. ஆவரே அரங்கன் தேடுகின்ற
அளவிலா ஞானப்படைகளாக
அவனி காக்கின்ற ஆளுமை தரும்
அரசியல்களம் காணும் மக்களாக
9. ஆகவே தன்நிலை சிறந்து
அரங்கன் அவதார நோக்கமான
யுகமாற்றம் செய்யும் சேவையை
உயர்வாகச் செய்து முடித்து
10. முடித்துமே ஆறுமுகப் பெருமான்
முழுமை ஆசி பலம் கண்டிட
நாடெங்கிலும் ஞானப்படைகள்
ஞானதேசிகன் படைகளாக நிரம்பி
11. நிரம்பியே ஞான ஆட்சிதனை
நிலவுலகம் கண்டுத் தேறும்
வரம்பிலா எல்லாத் துறைகளும்
வளர்ச்சிநிலை கண்டோங்கும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—